நகராட்சி உடனடியாக ஜெனரேட்டர்கள் வாங்கி பொருத்தி அதன்மூலம் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் அங்கே குடிநீர் பிரச்னை இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே கரூர் நகராட்சிக்கு உடனடியாக நிதி உதவி தேவை இல்லை இப்போது. அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாகவும் இல்லை. ஆகவே உடனடியாக அந்த நகராட்சியே தன் நிதியிலிருந்து ஜெனரேட்டர்ஸ் வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்கனவே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திண்டிவனம் நகராட்சியில் பணிபுரியும் நகர சுத்தி தொழிலாளர்கள்.

*வினாஎண் 980—திரு. கே. எம். தங்கமணி: துங்கமணி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகராட்சியில் நிதி நிலை பற்றாக்குறை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தர எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நிதி நிலை பற்றாக்குறை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட 12 நகர சுத்தி தொழிலாளர்களில் 6 நகர சுத்தி தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். மீதியுள்ள 6 நகர சுத்தி தொழிலாளர்கள் விடுப்பினால் ஏற்படுகின்ற காலி இடங்களில் (Leave Vacancy) தொடர்ந்து பணி செய்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள், ஆறு பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆறு பேர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது கொடுக்க முடியும் என்ற நிலையில் தான் பதில் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் நிதி நிலைமை காரணமல்ல. வேண்டுமென்றே அவர்களை பழி தீர்க்கும் நோக்கத்தில் அது செய்யப்பட்டிருக்கிறது. காரணம் அங்கே அவர்களுக்கு உதவியாக வந்து அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கவில்லை என்ற கோபம் காரணமாக நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணமாகப் பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதைப் பற்றி தீர விசாரித்து உண்மையாக ஐந்தாறு ஆண்டுகளாக வேலை செய்து வந்த அந்தத் தொழிலாளர்களை தற்காலிக வேலையாட்களாக நியமிப்பது என்பது நியாயமல்ல என்பதை உணர்ந்து ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பழிவாங்கவேண்டும் என்ற நோக்கம் இருந்திக்குமேயானால் இப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொண்

டிருக்கமாட்டார்கள். ஆனால் 12 தொழிலாளர்களில் 6 பேர்கள் மீண்டும் காலியிடங்களில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். இன்னும் ஆறு பேர்கள் டெம்பரரியாக எப்போதெல்லாம் வேகன்சி வருகிறதோ அந்த நேரங்களில் அவர்களை அமர்த்திக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த முயற்சிகள் எடுத்துக் கொண்டு வரப்படுகின்றன. இப்போது நிதிநிலைமை நன்றாக இருக்கிறது என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நல்ல முறையில் மறு பரிசீலனை செய்யப்பட்டு பழி வாங்கவேண்டுமென்ற நோக்கம் இல்லாமல்—அதிகாரிகள் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியிருக்குமானால் நிச்சயமாக, கண்டிப்பாக அதைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் மீண்டும் அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கிற காரணத்தால் அப்படி இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து ஆராயப்படும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : நிதி நிலைமை காரணமாக அந்த ஆறு பேர்களை நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நிதி வசதி உள்ள பல நகராட்சிகளில் ஊழியர்களை நியமிக்காமல் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அங்கே போதிய அளவு ஊழியர்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இது பணி நீக்கம் செய்யப்பட்டவர்களைப் பொறுத்து எழுப்பப்பட்ட கேள்வி. இன்னும் கூடுதலாக ஆள்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வினா மூலம் அந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்கள். இப்போது இருக்கக் கூடிய நிலைமையில் அங்கே போதும் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட ஒரு நகரத்தில் அப்படிப் போதவில்லை என்று உறுப்பினர் அவர்கள் என்னிடம் தெரிவிப்பார்களேயானால் அது குறித்து நிச்சயமாக ஆவன செய்து உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

பர்கூர் அரசு மருத்துவமனை.

*வினா எண். 981—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூரில் உள்ள மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் பெண் டாக்டர் போடுவதற்கு உத்தேசம் உண்டா ?